# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 15 /2018**

திரு. P. செந்தில்குமார்,
த/பெ பொன்னுச்சாமி,
1157F, வங்கார ஓடை தெரு,
கந்தர்வகோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம் . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. P. செந்தில்குமார்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3070, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – 622 001. . . . . . எதிர்மனுதாரர்
(திரு.D. அசோக்குமார்/செயற்பொறியாளர்/
புதுக்கோட்டை)

**ஆணை நாள்: 29.6.2018**

1. திரு. P. செந்தில்குமார், த/பெ பொன்னுச்சாமி, 1157F, வங்கார ஓடை தெரு, கந்தர்வகோட்டை அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் 26.3.2018 நாளிடப்பட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.15/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான மின்னாத்தூர் கிராம புல எண்.485–11Cஇல் உள்ள மின் இணைப்பு எண். 125–015–125ஐ தனக்கு சொந்தமான பிசானத்தூர் கிராம புல எண்.76–11Cக்கு மாற்றிதர கோயிருந்தார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 6.4.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரான செயற்பொறியாளர்/புதுக்கோட்டை, புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் அவர்கள் 26.6.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பாக நடைபெற்ற கேட்புரையின்போது அளித்த கடிதத்தில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மின்னாத்தூர் கிராம புல எண்.485–11C-ல் உள்ள மின் இணைப்பு எண். 125–015–125ஐ அவருக்கு சொந்தமான பிசானத்தூர் கிராம புல எண்.76–11Cக்கு மாற்றித்தரும்படி மேல்முறையீட்டு மனுவில் கோரியிருந்தபடி பங்குபணி (DCW) திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய அனுமதியுடன் பணி 12.6.2018 அன்று முடிக்கப்பட்டு 21.6.2018 அன்று மின் இணைப்பு எண்.124–031–343–ன்படி புல எண் மாற்றம் செய்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது என்பதனை தெரிவித்துள்ளார்.

5. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 26.06.2018 நாளிட்ட மின் குறைதீர்ப்பாளருக்கு முகவரியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரும் தான் கோரியிருந்த மின்இணைப்பு பணி முடிக்கப்பட்டு விட்டது என்று மின்குறைதீர்ப்பாளரிடம் கேட்புரையின்போது தெரிவித்து அதற்கான கடிதத்தையும் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ அனுப்புநர்:–*

*திரு. P. செந்தில்குமார்,*
*த/பெ பொன்னுச்சாமி,*
***1157F**, வங்கார ஓடை தெரு,*
*கந்தர்வகோட்டை அஞ்சல்,*
*புதுக்கோட்டை மாவட்டம்*

*பெறுநர்:—*
*உயர்திரு மின்குறைதீர்ப்பாளர் அவர்கள்*
*மின்குறைதீர்ப்பாளர் அலுவலகம்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,*
***19**A, ருக்மினி லட்சுமிபதி சாலை,*
*எழும்பூர், சென்னை.*

*ஐயா,*

*நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் எனக்கு பிசானத்தூர் கிராமம் சர்வே எண்.**76—**IIC-க்கு விவசாய புல எண் மாற்றம் செய்து மின் இணைப்பு **21.6.2018**ல் வழங்கி விட்டனர். மின்இணைப்பு எண்.**124—031—343** ஆகும். எனவே, மின்குறைதீர் மன்றத்தில் நான் கொடுத்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன்.*

*இப்படிக்கு*
*Sd/xxx*
*(P. செந்தில்குமார்)* ”

**6.** மேல்முறையீட்டாளர், தனது **26.6.2018** நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கோரியிருந்தபடி புல எண் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளதால் மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.**15/2018** முடித்துவைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
**1)** திரு. P. செந்தில்குமார்,
த/பெ பொன்னுச்சாமி,
**1157**F, வங்கார ஓடை தெரு,
கந்தர்வகோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3070 கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – 622 001.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.